

நீங்கள் தடுப்பூசி போட்டுள்ளீர்களா?

# தவற விட வேண்டாம்.

# தடுப்பூசி போடுங்கள்.

## சின்னம்மை அற்ற ஓர் உலகத்துக்காக - தன்னையும் பிறரையும் பாதுகாத்தல்.

### சின்னம்மை நோயற்ற ஓர் உலகம் சாத்தியமானது.

சின்னம்மை நோயை, உலகிலிருந்து முற்றாக அழிக்கும் நோக்கத்துக்கு சுவிற்சர்லாந்து ஆதரவளிக்கின்றது. வடஅமெரிக்கா, தென் அமெரிக்கா, பின்லாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் தடுப்பு மருந்தின் உதவியினால் சின்னம்மை நோய் அழிக்கப்பட்டுள்ளது. மற்றைய ஸ்கன்டினாவிய நாடுகளிலும் சில ஆசிய நாடுகளான யப்பான், தாய்வான் அல்லது தென் கொரியா போன்றவற்றிலும் முற்றாக அழிக்கப்படும் தறுவாயிலுள்ளது. சுவிற்சர்லாந்திலிருந்தும் சின்னம்மை நோய் முற்றாக அழிக்கப்படும் நல்ல காலம் வந்து விடும்.

©கூட்டாட்சியரசின் சுகாதாரத் திணைக்களம் (BAG)

வெளியீட்டாளர்: கூட்டாட்சியரசின் சுகாதாரத் திணைக்களம்
தொற்றுநோய்ப் பிரிவு
CH-3003 பேர்ண்

வெளியீட்டுக்காலம்: ஒக்ரோபர் 2013

**சின்னம்மை நோய்க்கெதிரான தடுப்பூசி, அதனைத் தவற விட வேண்டாம்.**

யாருக்கு சின்னம்மை நோய் வந்துள்ளதோ, அவர் வீட்டிலிருக்க வேண்டும்.
**www.stopmasern.ch**

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

சின்னம்மை நோய்க்கெதிரான தடுப்பூசி - கூட்டாட்சியரசின் சுகாதாரத் திணைக்களத்தினதும் (BAG) மாநிலத்தினதும் ஒரு பிரச்சாரம்.

## யாருக்கு சின்னம்மை நோய் வந்துள்ளதோ, அவர் வீட்டிலிருக்க வேண்டும்.

சின்னம்மை நோய் அதிகம் பரவுகின்ற ஒரு தொற்றுநோயாகும். அதனால் சின்னம்மை நோய் வந்தால், அவர் வீட்டிலேயே இருக்க வேண்டும். அந் நோயின் உணர்குறிகளும் அதனால் ஏற்படும் உபாதைகளும் சகிக்க முடியாதவை. அத்துடன் அவை பலமான குழப்பமான நோய்களையும் ஏற்படுத்தலாம். சின்னம்மை நோயுற்றவருடன் தொடர்பு வைத்துள்ளவர்கள், அவசியம் தொற்றுநோய்த்தடுப்புள்ளவர்களாக இருக்க வேண்டும், ஏற்கனவே தடுப்பு மருந்து பெற்றுக்கொண்டவராக இருக்கலாம் அல்லது ஏற்கனவே இந் நோயினால் பீடிக்கப்பட்டு குணமடைந்தவராக இருக்கலாம். நோய் தொற்றியதிலிருந்து நோய் குணமடைய மூன்று கிழமைகள வரை செல்லலாம். இக் காலத்தில் ஒவ்வொருவரும் எதையாவது ஒன்றைத் தவற விட நேரிடலாம்.



# நோய்

## சின்னம்மை நோய் என்றால் என்ன?

தடிமன், இருமல், கண் வருத்தம், காய்ச்சல், உடலில் ஆங்காங்கே சிறிய சிவப்பு நிறமான பருக்கள் போட்டிருப்பது சின்னம்மை நோயின் அறிகுறிகளாகும். அநேகமாக அது வேறு விதமான சிக்கலான நடுக்காது வீக்கம் போன்ற நோய்களையும், சில சந்தர்ப்பங்களில் நிமோணியா, மூளையழற்சி போன்றவற்றையும் தோற்றுவிக்கும். ஊனமுறுதலும் அதன் விளைவாக வரலாம், அரிதான சில சந்தர்ப்பங்களில், மரணமும் சம்பவிக்கலாம். சாதாரணமாக, ஐந்து நாட்களின் பின் நோய் குணமாகி விடும்.

## சின்னம்மை நோய் ஒரு சிறுபிள்ளை நோயா?

இல்லை. யார் ஒரு முறை சின்னம்மை நோயினால் பீடிக்கப்படவில்லையோ அல்லது அதற்கெதிராக தடுப்பூசி போடவில்லையோ, அவர் எந்த வயதிலும் அந் நோயினால் பீடிக்கப்படலாம். வயது வந்தவர்களுக்கு இந்த நோயின் உக்கிரம் அதிகமாக இருப்பதுடன், மேலே கூறப்பட்ட குழப்பமான நோய்களையும் அநேகமாகத் தோற்றுவிக்கும்.

## ஒரு பிள்ளை இந் நோயினால் பீடிக்கப்பட்டு குணமடைந்திருப்பது நன்மையானதா?

இல்லை. சின்னம்மை ஒரு தீமையற்ற நோயல்ல அத்துடன் அதனால் பீடிக்கப்பட்டு குணமடைவதால் பிள்ளையின் நிர்ப்பீடனத்தொகுதி பலப்படுவதில்லை. அதற்கு மாறாக: நோய் வந்து பல வாரங்களுக்குப் பின்பும் நிர்ப்பீடனத் தொகுதி பலவீனமாகவே இருக்கும். சின்னம்மைக்கெதிரான தடுப்பூசியானது, நோய் உபாதையின் துன்பம், குழப்பமான நோய்கள், வைத்தியசாலையில் தங்கியிருத்தல், மரணம் என்பவற்றை தடுக்கின்றது. அத்துடன் அது பலவீனமான நிர்ப்பீடனமுள்ள பிள்ளைகள், மனிதர்களை அபாயகரமான நோய்களிலிருந்து பாதுகாக்கின்றது. நோய்வாய்ப்பட்ட ஒரு பிள்ளை நீண்ட காலத்துக்கு பிள்ளைப்பராமரிப்பகம், பாலர்பாடசாலை அல்லது பாடசாலைக்குச் செல்ல முடியாது. அதனால் இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெற்றோரின் நிலை சிரமமாக இருக்கும், ஏனெனில் இவர்கள் பிள்ளையை வீட்டில் வைத்துப் பராமரிப்பதற்கான ஒழுங்குகளை ஆயத்தப்படுத்த வேண்டும்.

# தடுப்பூசி பாதுகாக்கின்றது

## சின்னம்மை நோய்த் தடுப்பு மருந்தையிட்டுப் பயப்பட வேண்டாம்.

40 வருடங்களுக்கு மேலாக பாவிக்கப்படும் இத் தடுப்பு மருந்து, நம்பகமானது. அது நிச்சயமானது, சக்தி வாய்ந்தது. இத் தடுப்பு மருந்து ஓர் இயற்கையான தொற்றுநோய் மாதிரியான பாவனையை உண்டாக்கும். உடலானது, எப்போதும் நோயிலிருந்து பாதுகாக்கக் கூடிய நோயெதிர்ப்புக்கிருமிகளை உருவாக்கும். ஏற்படக் கூடிய பக்க விளைவுகள், வழக்கமாக பலவீனமானதாகவும் அத்துடன் நோயினால் உண்டாகும் அபாயத்தை விட, மிக மிக குறைந்தளவு அபாயத்தைக் கொண்டதாகவும் இருக்கும். முதலாவது மருந்தை 12 மாதத்திலும் இரண்டாவது மருந்தை 15 – 24 மாதங்களுக்குமிடையில் கொடுக்க வேண்டுமென பரிந்துரைக்கப்படுகின்றது. இளைஞர்களும் வயது வந்தவர்களும் (1964 ஆம் ஆண்டும் அதற்குப் பின்பு பிறந்தவர்களும்) எந்த நேரத்திலும் தாமதித்த தடுப்பு மருந்தைப் பெற்றுக் கொள்ளலாம். அநேகமான சந்தர்ப்பத்தில் சின்னம்மை நோய்த் தடுப்பு மருந்து கூகைக்கட்டு, றுபெல்லா எனப்படும் தட்டம்மை (ஜேர்மனி தட்டம்மை) தடுப்பு மருந்துகளுடன் (MMR-Impfung) இணைத்து செலுத்தப்படுகின்றது. ஒருவர் மேற்கூறப்பட்ட நோய் ஒன்று ஏற்பட்டு குணமடைந்திருந்தாலும் அல்லது இவற்றில் ஒரு நோய்க்கெதிராக தடுப்பூசி போட்டிருந்தாலும் கூட, இந்த MMR – தடுப்பூசியைப் போடுதல் பிரயோசனமானது.

## சின்னம்மை நோய்க்கெதிராக ஏன் தடுப்பூசி போட வேண்டும்?

சின்னம்மை நோய் சுவிற்சர்லாந்தில் வழக்கமாக பரவுகின்ற தொற்றுநோயாகும். நோய்வாய்ப்பட்ட ஒவ்வொரு மனிதனும் மற்றவருக்கு அந் நோயைத் தொற்ற வைக்கலாம் அத்துடன் நோயெதிர்ப்புச்சக்தி இல்லாத ஒவ்வொருவருக்கும் இந் நோய் தொற்றும் அபாயத்தை உண்டாக்குகின்றார். முக்கியமாக சிசுக்கள், பலவீனமான நோயெதிர்ப்புச் சக்தியுள்ள மனிதர்கள், தடுப்பு மருந்து பெறாத அல்லது சின்னம்மை நோயினால் இதுவரை பீடிக்கப்படாத நோய்க்கெதிரான பாதுகாப்பற்ற கர்ப்பிணிப் பெண்கள் போன்றோர் இதற்குள்ளடங்குவர். எனவே, சின்னம்மை நோய்த்தடுப்பு மருந்து மற்றவர்களையும் பாதுகாக்கின்றது.

**நீங்கள் எந்த நோய்களுக்கு எதிராக தடுப்பு மருந்து பெற்றிருக்கின்றீர்கள் என்பதைப் பரிசீலியுங்கள். தேவையேற்பட்டால் தேவையான தடுப்பு மருந்துகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.**
உங்களது நடவடிக்கையால் உங்களையும் பிறரையும் பாதுகாருங்கள். உங்களது வைத்தியருடன் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது மருந்தகத்தில் ஆலோசனை பெறுங்கள்.

பி.கு: இப்போது சின்னம்மை நோய்க்கெதிராக தடுப்பூசி போட விரும்புபவர்களுக்கு, 2015 ஆம் ஆண்டு இறுதி வரை, MMR - தடுப்பு மருந்துக்கு வருடாந்த ஆரம்ப கட்டண விலக்கு அளிக்கப்படும் (1964 ஆம் ஆண்டும் அதற்குப் பின்பு பிறந்த அனைவருக்கும் இது செல்லுபடியாகும்).